# 13 பொதுநிலையினரின் அழைப்பு



படம் 13.1 - எங்களுக்கு உதவி செய்பவர்கள்

இந்தப் படத்தில் இருப்பவர்கள், மக்களுக்குச் சேவை செய்வதற்காகத் தமது திறமைக்கேற்பத் தொழிலைத் தேர்ந்து கொண்டவர்களாவர். இவர்கள் தமது பணியைத் தமது தொழிலாகச் செய்கிறார்கள். ஆனால் நாம் கிறிஸ்தவர்கள் என்ற ரீதியில் அர்ப்பணிப்புடன் மற்றவர்களின் நன்மைக்காகப் பணியாற்றுவதற்கு அழைப்பைப் பெற்றுள்ளோம். இது, திருமுழுக்கின் வழியாக நாம் பெற்ற அழைப்பாகும்.

திருமுழுக்கின்போது நாம் கிறிஸ்மா எண்ணெயினால் அரச, குருத்துவ, இறைவாக்கினராக அருட்பொழிவு செய்யப்படுகின்றோம். அந்த அருட்பொழிவினால் நாம்,

1. அரச (ஆயர்) பணி
2. குருத்துவப் பணி
3. இறைவாக்கினர் பணி

ஆகிய மூவிதப் பணியாற்ற அழைக்கப்படுகின்றோம். ஆகவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் திருமுழுக்குப் பெற்றதன் வழியாகக் கிறிஸ்துவின் மீட்பளிக்கும் அன்பைக் கிறிஸ்தவ ஒன்றியத்திற்குக் கொண்டு செல்லும் பொதுக் குருத்துவ அழைப்பைப் பெற்றவராவர்.

ஆகவே பொதுக் குருத்துவ அழைப்பைப் பெற்றுள்ளவர்கள் கிறிஸ்துவின் அரச, குருத்துவ, இறைவாக்குப் பணியில் பங்குதாரராகின்றனர். ஆயர்கள், அருட்பணியாளர்கள், திருத் தொண்டர், துறவறத்தோர் தவிர திருமுழுக்குப் பெற்றுள்ள மற்ற அனைவரும் பொதுநிலையினராவர். பொது நிலையினர் தமது அன்றாட பணிகளின் வழியாக இறையாட்சி யை இவ்வுலகில் பரப்புவதற்கு உழைக்கின்றனர். குருத்துவம் என்னும் அருளடையாளத்தைப் பெற்றவர்கள் பணிக்குருத்துவம் பெற்றவர்களாவர்.

ஏழாம் தர மாணவர்கள் என்ற ரீதியில் பொதுக் குருத்துவத்துவம் என்றும் அழைப்பின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சில பணிகள் கீழே காட்டப்படுகின்றன.

| அரசர் (ஆயர்) | குருத்துவ | இறைவாக்கு |
|---|---|---|
| • இறைவார்த்தைக்குச் சான்றுபகர்தல்<br>• உண்மையை வெளிப் படுத்தல்<br>• தினமும் திருவிவிலி யத்தை வாசித்தல்<br>• இறைவார்த்தைக்கு மதிப்பளித்தல்.<br>• சமூகத்தில் நீதி, நியா யங்களுக்கு சாட்சிய ளித்தல், நீதியோடு வாழ்தல் | • மற்றவர்களுக்காக செபித்தல்.<br>• பீடப் பணியாளராக பணியாற்றுதல்.<br>• திருவழிபாட்டுச் சடங் குகளில் பக்தியாய் பங்கு கொள்ளுதல்.<br>• திருவழிபாட்டை கருத் துள்ளதாக்குவதில் அருட்தந்தைக்குத் துணை புரிதல்.<br>• பாடகர் குழாமில் செயற்பாட்டுடன் கூடிய அங்கத்தவராதல். | • பக்தி சபைகளில், பல் வேறு பணிகளை அதிகார உரிமையுடன் பொறுப் பேற்றுப் பணியாற்றுதல்<br>• பாடசாலைகளிலும் தலைமைத்துவத்தை ஏற்றுப் பணியாற்றுதல்.<br>• மறைப் பாடசாலை பணி களில் துணைபுரிதல்<br>• கைவிடப்பட்டவர் களின் நலன்கருதி சிரமதான பணிகளை ஒழுங்கு செய்பவர்க ளுக்கு தானாக முன் வந்து உதவுதல். |


இலவச விநியோகத்திற்காக

## பொதுக் குருத்துவத்தினால் அளிக்கப்படும் பொறுப்புகளும் அவற்றை நிறைவேற்றுவதற்குத் துணைபுரியும் ஒன்றியங்களும்

**திருப்பாலத்துவ சபை**

மற்றவர்களுக்காகச் செபித்தல்

இயேசுவின் அன்பை மற்றவர்களுக்குப் பகிர்ந்து அளித்தல்

முன்மாதிரியாக வாழுதல்

குழு வாழ்விற்குச் சான்று பகர்தல்



**பீடப் பரிசாரகர் குழாம்**

ஆலயத்தைத் தூய்மையாக வைத்திருத்தல்

திருப்பலியில் பக்தியுடன் உதவுதல்

தூய்மையான உடையுடன் திருப்பலியில் உதவுதல்

அருளடையாளங்களை வழங்கும்போது அருட்தந்தைக்கு உதவுதல்

ஆ ளு மை மை ய க்
கட்டியெழுப்புதல்

இறையாட்சிப்
பணிக்காகத் தமது
திறமைகளை
வளர்த்துக்
கொள்ளுதல்

சிரமதானப் பணிகளில்
உதவுதல்

**செயற்பாடுடைய**
**வீர சிறுவர் இயக்கம்**
Lakiri - vi

சமய வேறுபாடின்றி
ஒற்றுமையுடன்
பணியாற்றுதல்

திருவழிபாட்டை
அர்த்தமுள்ளதாக்குவதற்காக
பாடல், இசையில் பங்கு
கொள்ளல்

நன்கு பயிற்சி பெற்று
பாடுதல்



பாடல் குழு

இறைவார்த்தையை
வாசிப்பதில் பங்கு
கொள்ளுதல்

தமது திறமைகள்,
ஆற்றல்களை இறை
மகிமைக்காகப்
பயன்படுத்தல்

இந்தப் பாடலை மனனஞ் செய்யுங்கள்.

பாலரை என்னிடத்தில் வரவிடுங்களே
என்று சொல்லியே எம்மையே
மறைபரப்ப மறை உரைக்க பல்திசை செல்வோம்
என்று சொல்கிறார் இயேசுவே

விசுவாசத்தில் தீபமாகுவோம் நாம்
உலகின் இருளினைப் போக்கியே
பகிர்ந்து கொள்ளவே பகிர்ந்து வாழவே
எம்மை அழைக்கிறார் இயேசுவே

(வண்ண மலர் இறுவெட்டு பாடல் எண் 09)

## செயற்பாடு

1. பொதுக் குருத்துவத்தின் பொறுப்புக்களை எழுதி அதனை நிறைவேற்றுவதற்காக நீர் தெரிவு செய்யும் - பங்கில் செயற்படும் ஒன்றியங்களின் பெயர்களை எழுதுக.
2. பொதுக் குருத்துவத்தில் அளிக்கப்படும் பொறுப்புகளை நிறை வேற்றும் ஆறு விதங்களை எழுதுக.
3. பங்கில் செயற்படும் ஒன்றியங்களில் நீர் இணைய விரும்பும் ஒன்றியத்தின் பெயரை எழுதி அதனை விரும்புவதற்கான காரணத்தையும் எழுதுக.



**வாழ்க்கைக்கு...**

£[QÀ EÒÍ £õ»º, ]ÖÁº \ø£P Î À
Cø n¢x £o ¯õØÖ[PÒ.